இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 351 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 16 – சனிக்கிழமை 01 ஆகஸ்ட் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 351 : Thiruvalluvar Year - 2057 - Aadi 16 - Saturday 01 August 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆக. 3 அன்று எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் தலைமையில் - தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!





சென்னை, ஆக 01-

**“விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக் கண்டித்து தி.மு.கழகம் சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தஞ்சையில் ஆகஸ்ட் 3 - திங்கள்கிழமை அன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

**வேதனை தரும் த.வெ.க. ஆட்சி! விவசாயிகள் படும் துன்பமே அதற்கு சாட்சி!** என நாட்டின் முதுகெலும்பாய் விளங்கும் விவசாயிகளை வீதிகளில் போராடவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

**கடன் தள்ளுபடியில் ஏமாற்றம்:**

**தேர்தலுக்கு முன்பு:**

”5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்கள் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும். 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்படும்.”

**தேர்தலுக்குப் பின்பு:**

50 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி என்ற வெற்று அறிவிப்பை வெளியிட்டு, அதன்காரணமாக விவசாயிகள் வெகுண்டெழுந்து தற்போது வரை போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதால், 75 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே முழுக் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டது.

சொன்னதைச் செய்ய நேரம் கேட்ட முதலமைச்சர், இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும் என்றாவது விவசாயிகளிடம் சொல்லியிருக்க வேண்டும்.

**மேகதாது விவகாரத்தில் த.வெ.க. அரசின் செயல்படா நிலை:**

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் இருந்தே மேகதாது அணை கட்டுவதில் கர்நாடக அரசு தீவிரம் காட்டி வருகிறது.

**ஜூன் 11:** ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களை கர்நாடக முதலமைச்சர் நேரில் சந்தித்து மேகதாது நிதியுதவி கோரி மனு அளித்துள்ளார்.

**ஜூன் 12:** ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சரை நேரில் சந்தித்து மேகதாது திட்டத்துக்கு ஒப்புதல் வழங்க வலியுறுத்தினார்.

**ஜூலை 27:** டெல்லியில் கர்நாடகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி எம்.பி.க்களுடன் கூட்டம் நடத்தி, மேகதாது அணை கட்டக் கடைமடை மாநிலங்களின் அனுமதி தேவையில்லை என நாடாளுமன்றத்தில் ஒன்றிய ஜல்சக்தி துறை தெரிவித்த பதிலை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார்.

அதேநாளில், கர்நாடக அமைச்சர் ராமலிங்க ரெட்டி, கர்நாடக அரசின் டெல்லி பிரதிநிதி, கர்நாடக அரசின் தலைமை வழக்கறிஞர் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் மேகதாது அணை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தையும் நடத்தியுள்ளார்.

ஊடகங்களிடம் தொடர்ந்து மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் எனவும், தமிழ்நாடு அரசின் அனுமதி தேவையில்லை எனவும் பேசி வருகிறார்.

இதற்கு மாறாக, இவ்விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தனது கடமை முடிந்துவிட்டது என மவுனம் காத்து வருகிறார்.

**முதலமைச்சர் இன்னும் வாய் திறக்கவில்லை!**

இதற்கிடையில், தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடகம் சென்று பேச்சுவார்த்தைநடத்தவுள்ளார்என்றுவேளாண் துறை அமைச்சர் சொன்னார். பின்னர் அவரும் இன்னும் சிலரும் இல்லை என்று மறுத்தார்கள்.

இப்போது தமிழ்நாடு சார்பில் சில விவகாரங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, கர்நாடக முதலமைச்சரே தெரிவித்துள்ளார். மேலும் இதுதொடர்பாக வரும் ஆகஸ்ட் 3ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் கர்நாடக செல்வதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், காவிரியில் நமக்கு உரிய பங்கினை வழங்க காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவிட்டும், அதனை நிறைவேற்ற முடியாது என்று கர்நாடக மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்னும் வாய் திறக்காமல் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, மேகதாது விவகாரம் தொடர்பாக ஒரு தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்றத்தின் மூலம் வலியுறுத்தி இருக்கின்ற நிலையில், இந்த கர்நாடக பயணம் இதனை நீர்த்துபோகச் செய்யாதா? என்ற கேள்வியும் எழுகிறது.

> **“தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காப்பதாக ஊடகங்களில் ஓயாமல் செய்திகள் வெளியாகின்றன. அதற்கும் எந்தப் பதிலும் இல்லை.”**

இப்படி இந்த அரசைப் பொறுத்தவரையில் எந்தத் தகவல்களிலும் தெளிவு இல்லை; எதிலும் வெளிப்படைத்தன்மை இல்லை. எதற்கெடுத்தாலும் குழப்பம்; எல்லாவற்றிலும் ஏமாற்றம். இதுவே இந்த அரசின் வழக்கமாக மாறியிருக்கிறது.

தனது திரைப்படம் கர்நாடகாவில் வெளியாவதில் சிக்கல் ஏற்படக் கூடாது என்பதற்காகவே முதலமைச்சர் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசாமல் அமைதி காப்பதாக ஊடகங்களில் ஓயாமல் செய்திகள் வெளியாகின்றன. அதற்கும் எந்தப் பதிலும் இல்லை.

**அனைத்துக் கட்சிக் கூட்டம்:**

அனைத்துக் கட்சிக் கூட்டத்தோடு, விவசாயச் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி, முதலமைச்சருக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் உட்பட தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளும், விவசாயச் சங்கங்களும் அரசுக்குக் கோரிக்கை விடுத்தும் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அமைதி காத்து வருகிறார் முதலமைச்சர்.

மாநிலத்தின் முக்கியப் பிரச்சினையில் யார் குரலையும் கேட்காமல் indifferent ஆகவும், inactive ஆகவும் இந்த அரசு இருப்பது நல்லதல்ல.

அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கும் தி.மு.க.தான் அழைப்பு விடுக்க வேண்டும் என முதலமைச்சர் எதிர்பார்க்கிறாரா? அரசால் முடியாது என்றால் சொல்லி விடுங்கள்; அதற்கும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

**விவசாயிகளின் அடுத்த பெரும் பிரச்சினை – குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு:**

கடந்த ஆண்டு 6.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடந்து சாதனை படைத்த நிலையில், இந்த ஆண்டு மேட்டூர் அணை திறக்கப்படாததால் 1.5 லட்சம் ஏக்கர் சாகுபடி மட்டுமே நடப்பதாகச் செய்திகள் வருகிறது.

இதனால் 2,500 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு ஏற்பட்டு 14 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுத் தவிக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் கீழ்க்கண்ட வகையில் தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகுப்பினைக் காலம் தாழ்த்தாமல் அறிவித்திட வேண்டும்.

1) ஏக்கர் ஒன்றுக்குக் குறுவை நிவாரணமாக 25 ஆயிரம் ரூபாய்.

2) காப்பீட்டுத் திட்டத்துக்கான பிரீமியம் தொகையை அரசே செலுத்தி முழுக் காப்பீடு கிடைக்க உதவி.

3) சம்பா சாகுபடிக்கான மறுமுதலீடாக விதை, உரம், பூச்சிக்கொல்லி என இடுபொருட்கள் மானியமாக வழங்குதல்.

**கழகம் சார்பில் டெல்டா மண்ணில் போராட்டம்!**

இப்படி, விவசாயப் பெருமக்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், காவிரி உரிமையை நிலைநாட்டுவதில் த.வெ.க. அரசின் மெத்தனப்போக்கைக் கண்டித்தும் வரும் 03.08.2026 அன்று காலை 10.00 மணியளவில், தஞ்சாவூர், பனகல் கட்டடம் அருகில் கழக இளைஞரணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்த தி.மு.க. முடிவெடுத்துள்ளது.

இப்போராட்டத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழகத் துணை அமைப்புகளானப் பல்வேறு சார்பு அணிகளின் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும்.

மேலும், அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்த தோழர்களும், இவ்விவகாரத்தில் ஒருமித்த கருத்துடைய அனைத்து அரசியல் கட்சிகளின் தோழர்களும் போராட்டத்தில் கலந்துகொண்டு விவசாயிகளின் கோரிக்கைகள் விரைவில் வென்றிடத் துணை நிற்க வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அரசு மிகப்பெரிய போராட்டத்தை சந்திக்க நேரிடும்!**

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் என்பது, விவசாயிகளின் குரலைக் கேட்காமல் இருக்கும் த.வெ.க. அரசின் கவனத்தை ஈர்க்கும் முதல்கட்ட நடவடிக்கைதான். அரசின் இந்த மெத்தனப்போக்குத் தொடர்ந்தால், மிகப்பெரிய போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும் எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### மேகதாது பிரச்சினை:

## ஒன்றிய அரசைக் கண்டித்து விவசாயிகள் போராட்டம்!

### ஆற்றில் இறங்கி கண்டன முழக்கம்!

*நாகை, ஆக. 1-*

*ஒன்றிய அரசைக் கண்டித்து நாகை விவசாயிகள் வறண்ட ஆற்றில் இறங்கி நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட தமிழ்நாடுஅரசின்அனுமதி தேவையில்லை என ஒன்றியஇணைஅமைச்சர் தெரிவித்ததற்குகண்டனம் தெரிவித்து, நாகை மாவட்டம் மகிழி கிராம விவசாயிகள்போராட்டத்தில்ஈடுபட்டனர்.மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படாததால், நாகை மாவட்டத்தில் ஆறுகள், குளங்கள்மற்றும் விவசாயநிலங்கள்வறண்டு காணப்படுவதாகவிவசாயிகள் வேதனை தெரிவித்தனர். கர்நாடக அரசு தமிழகத்திற்குவழங்கவேண்டிய உரிய பங்கு நீரை பெற்றுத் தர வேண்டும், மேகதாது அணை கட்டுவதைதடுக்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்எனவலியுறுத்தி முழக்கங்களைஎழுப்பினர்.*

---

## த.வெ.க. ஆட்சியில் 50% முதல் 75% வரை கூடுதல் மின் கட்டணம்!

### மின் கட்டணம் மூலம் கொள்ளையடிப்பதாக பொதுமக்கள் புகார்!

*சென்னை, ஆக. 1-*

*தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் 50 முதல் 75 சதவிகிதம் வரை மின்கட்டணம்கூடுதலாகவந்துள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, தாறுமாறாக மின்கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

*ஆட்சிக்கு வந்தால் 200 யூனிட் மின்சாரம் இலவசம் என அறிவித்துவிட்டு, ஆட்சிக்கு வந்த பிறகு மெகா மோசடியை த.வெ.க. அரசு அரங்கேற்றியுள்ளது. 200யூனிட் இலவசம் என அறிவிக்கப்பட்டதால், மின்கட்டணம் கணிசமாக குறையும் என எதிர்பார்த்து காத்திருந்த பொதுமக்களுக்கு விஜய் அரசு பேரதிர்ச்சியை கொடுத்துள்ளது. மாநிலம் முழுவதும் மின் கட்டண கணக்கீட்டில் பல்வேறு குளறுபடிகளை ஏற்படுத்தி, மின் கட்டணம் தாறுமாறாக வசூல் செய்யப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில்கடந்தமே மாதத்தை விட, இம்மாதம் எடுக்கப்பட்ட மின் கட்டணம்50முதல்75சதவீதம் கூடுதலாக இருப்பதாகபொதுமக்கள்குற்றம் சாட்டியுள்ளனர். 200 யூனிட் மின்சாரம் இலவசம் என்று கூறிவிட்டு, தாறுமாறாக மின்கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதாக த.வெ.க. அரசுக்கு பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.*

**சேலம்**

*த.வெ.க. அரசு மறைமுகமாக மின்கட்டணத்தைஉயர்த்தியுள்ளது 200 யூனிட் இலவசம் என்பது நடைமுறைக்கு வரவில்லை மின் கட்டணம் உயர்வு குறித்து உரிய விளக்கம் அளிக்க வேண்டும்*

*இதனிடையே, த.வெ.க. அரசு மறைமுகமாக மின் கட்டணத்தை உயர்த்தியுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். 200 யூனிட் இலவசம் என்பது நடைமுறைக்கு வரவில்லை என்றும், இது, நடுத்தரகுடும்பத்தினரை பெருமளவில் பாதித்துள்ளதாகவும் சேலம் மாவட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். மின்கட்டணம்உயர்வுகுறித்துஉரிய விளக்கம் அளித்திட வேண்டும் என்றும் அவர்கள்வலியுறுத்தியுள்ளனர்.*

---

### தலைமைச் செயலக வளாகத்தில்

## 3 பெண்கள் தற்கொலை முயற்சி!

### காவல்துறை மிரட்டல்!

*சென்னை, ஆக. 1-*

*திருச்சி மாவட்டம் கம்பரசம்பேட்டை பகுதியை சேர்ந்த இஸ்லாமிய பெண்ணானசர்புன்னிஷா என்பவர் தனது இரு மகள்களுடன் வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். இந்நிலையில், வீட்டை காலி செய்ய சொல்லி வீட்டின் உரிமையாளரும், அவரது நெருக்கடியின் பேரில் காவல்துறையினரும் தன்னை மிரட்டுவதாக கூறி தலைமைச் செயலகத்துக்கு மனு அளிக்க வந்தார்.*

*அப்போது,காவல்துறையின்மிரட்டலைகண்டித்து தனது 2 மகள்களுடன் திடீரென தூக்க மாத்திரையை சாப்பிட்டுதற்கொலைக்கு முயன்றார். இதனால் தலைமைச் செயலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.*

*இதுகுறித்து 108 ஆம்புலன்ஸுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் உடனடியாக வராததால் 3 பெண்களும் அங்கு மயக்க நிலையில் கிடந்தனர். இதன்பின்பு ஆம்புலன்ஸ் வந்து, மூன்று பேரும் ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.*